23—

தூர் வாருதல்

***18903—திரு. ஏ.கே. போஸ்:**

திரு. இரா. அண்ணாதுரை:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரிலுள்ள செல்லூர் கண்மாயைத் தூர் வாரி, ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை, செல்லூர் கண்மாயைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். செல்லூர் கண்மாயைத் தூர்வாரி, வளப்படுத்தும் பணியை உள்ளடக்கி, செல்லூர் கண்மாயிலிருந்து வெளியேறும் வெள்ள நீரை வைகை ஆற்றுக்கு மூடிய கால்வாய்மூலம் கடத்துவதற்குத் திட்ட மதிப்பீடு ரூ.703.50 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, செல்லூர் கண்மாய் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாராமல் கண்மாய் முழுவதுமே படிப்படியாக மண் சேர்ந்து மேடானபடியாலும், அங்கே சீமைக்கருவேல முள் முளைத்து புதர்களாகக் காட்சியளிக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நிலத்தடி நீரைச் சேமிப்பதற்காக, அந்தக் கண்மாயைத் தூர்வாரி, அங்கே நிலத்தடி நீரை சேமித்தால், அங்கே அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் ஆதாரம் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அந்தக் கண்மாயைத் தூர்வாரிக் கொடுப்பார்களா என்று தங்கள்மூலமாக கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

2013 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.703.50 இலட்சத்திலே திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதை தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு தயாரித்து, செய்து கொடுப்பதற்கு ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லூர் கண்மாய் 94 ஏக்கர் பரப்பளவு கொண்ட கண்மாய். அது தற்போது 52 ஏக்கராக சுருங்கிவிட்டது. சமீபத்தில்கூட நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதைத் தூய்மைப்படுத்தக்கூடிய பணியைத் துவக்கி வைத்தார்கள். கண்மாய்க்கரையும், கண்மாயும் சமமாகிவிட்டது. எனவே, அந்தக் கண்மாயைத் தூர்வாரி, தண்ணீர் தேக்குவதோடு, கண்மாய்க்குள் மழை நீர் வடிகால் அமைத்து நீர் செறிவு தொடர்ந்து ஏற்படுவதற்கு வசதி செய்யப்பட்டால் நிரந்தரமாக நீர் நிரப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதோடு நிலத்தடிநீர் உயர்வு ஏற்படும். சுமார் 2 இலட்சம் மக்கள் இதனால் குடிநீர் பெற்று பயன்பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதோடு நிரந்தரமாக நீர் நிரப்பினால், எதிர்காலத்திலே சுற்றுலாத்தலமாகவும் மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

அதேபோல, மாடக்குளம் கண்மாய் உள்ளிட்ட பல்வேறு கண்மாய்களைத் தூர்வாருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இன்றையதினம் வரையிலும் அரசாணை வெளியிடப்படவில்லை. அதையும் உடனடியாக வெளியிடவேண்டும் என்பதை நான்

இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன். செல்லூர் கண்மாயில் பாசன வசதியே இல்லை, வெறும் குடிநீர் பிரச்சினைதான். எனவே, இதற்கு பொதுப் பணித் துறை நிதி ஒதுக்கீடு செய்வதற்குச் சட்டத்தில் இடமில்லை. எனவே, செல்லூர் கண்மாயை மாநகராட்சியிடம் ஒப்படைத்து, மாநகராட்சி எடுத்துக்கொண்டால் எதிர்காலத்திலே குடிநீருக்கு இதை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் வரை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதுரை, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: 5 கிலோ மீட்டர் வரையிலும் நிலத்தடிநீர் உயர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, இதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்மாயை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். விரைவிலே அந்தப் பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பல்வேறு குளங்கள் தூர்வாரப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தப் பணிகளும் விரைவிலேயே நடைபெறும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஆனைக்குட்டம் மற்றும் குல்லூர்சந்தை அணைக்கட்டுகளைச் சீரமைக்க மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் 'டிரிப்' (DRIP) திட்டம்மூலம் 2011–2012 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டும், இதுவரை

2013 அக்டோபர் 25]

எந்தப் பணிகளும் துவங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கிய வாழ்வாதாரமாகவும், நீராதாரமாகவும் இருக்கக்கூடிய பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் மற்றும் குளங்கள் எல்லாம் நீண்டகாலமாகத் தூர்வாரப்படாமல் இருக்கின்றன. மழைக் காலங்களில் தண்ணீரை சரியாகச் சேகரித்து வைக்கமுடியாத நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளைத் தூர்வாரினால் அதிலிருந்து கிடைக்கக்கூடிய மணலை வைத்துக்கொண்டு, மாவட்ட மக்களுடைய 10 ஆண்டுகளுக்கான மணல் தேவையை நிவர்த்திச் செய்ய முடியும். சென்ற கூட்டத்தொடரில்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர்வாருவதற்கு ஒப்புக்கொண்டார்கள். ஆகவே, எப்பொழுது அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்பதையும், விரைவிலே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியில் 58 கிராம கால்வாய்த் திட்டம் நீண்டநாள் கோரிக்கையாக இருந்தது. ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 8 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. அந்தப் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தக் கிராமக் கால்வாய்த் திட்டத்திற்கு உட்பட்ட கண்மாய்களை இப்பொழுதே தூர்வாரி வைத்தால், அது அப்பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விக்கிரமங்கலம் கண்மாய் மற்றும் ஐயனார்குளம் கண்மாய் போன்றவை தூர்வாரப்பட்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. எனவே, அந்தப் பணிகளையும் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அந்தக் கண்மாய்களைத் தூர்வாருவதற்குண்டான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

கால்நடை கிளை மருத்துவமனை

***33882—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—